**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, தூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், வைகாசி மாதம் 23 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6 -ம் நாள் சனிக்கிழமை

**<u>இடைக்கால மனு எண். 43/2026</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 853/2017</u>**

1. R. சத்தியமூர்த்தி ... **மனுதாரர்/வழக்கில் 19 ம் பிரதிவாதியாக சேர விரும்பும் புதிய நபர்**

//எதிர்//

1. R. ராஜா ... **1 ம் எதிர்மனுதாரர்/வாதி**
2. பொன்னுசாமி
3. S. ராஜாமணி
4. R. விஸ்வபுதிரமணி
5. S. சுப்புலட்சுமி
6. S. சுந்தரராஜன் (இறந்துவிட்டார்)
7. D. பாலசுப்பிரமணியம் (எ) பாலசுந்தரம்
8. வெங்கடாசலபதி (எ) வெங்கடேசன் (இறந்துவிட்டார்)
9. E. விஜயகுமார்
10. சுமத்ரா தேவி
11. ஆதித்யா
12. சிவகாமி
13. ஜெயந்தி
14. மனோரஞ்சனி
15. அம்சவேணி
16. B. மோகன்
17. மரகதம்
18. சக்திவேல்

19. ரங்கநாதன் துரைசாமி ... **2 முதல் 19 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செந்தில்இளங்கோவன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன், அவர்கள் ஆஜராகியும், 18ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.பில்கிளின்டன், அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்டபடியும், 2 முதல் 5 மற்றும் 9 முதல் 17 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாகியும், 19ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் அவரை ஒருதலைபட்சமாக்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் அசல் வழக்கு எண்.853/2017 வழக்கில் மனுதாரரை 19ம் பிரதிவாதியாக சேர்த்து தாவா வழக்கை மேல்நடத்திக் கொள்ள வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1). மனுதாரர் இந்த வழக்கில் 19ம் பிரதிவாதியாக சேர விரும்பும் நபர் ஆவார். 1ம் எதிர்மனுதாரர்/ வாதி இந்நீதிமன்றத்தில் மற்ற 2 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரமும், உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்தானது 1 எதிர்மனுதாரர்/ வாதிக்கு கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது. அதைப் பொறுத்து 2 முதல் 9 எதிர்மனுதாரர்கள், 1

எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை அபகரிக்கும் பொருட்டு தவறான தகவல் அளித்து கோயமுத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 20.04.2013 ம் தேதி மு.வ.எண். 2216/2012 ன் படி Lok Adalat மூலம் தீர்ப்பாணை பெற்று, அதனை அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 5648/2013 ன் படி பதிவுக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மேற்படி லோக் அதாலத் தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என அறிவிக்கக் கோரியும், 1ம் எதிர்மனுதாரர்/ வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தைப் பொறுத்து 6 மற்றும் 8 பிரதிவாதிகள் கடந்த 24.07.2013 ம் தேதி ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளனர். அந்த கிரைய ஒப்பந்த ஆவணமானது பொய்யான தகவலின் படி ஏற்படுத்தப்பட்டதாகும். எனவே மேற்படி கிரைய ஒப்பந்தமும் செல்லாது என அறிவிக்கக் கோரியும் மற்றும் 1 எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தில் இருப்பதாக கூறும் அனுபவத்தை மற்ற எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எவ்விதத்திலும் தடையோ, இடையூறோ செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

1.2). 1 எதிர்மனுதாரர்/வாதி பெற்ற கிரைய ஆவணமே சட்டப்படி செல்லுபடியாகாத கிரைய ஆவணமாகும். மேற்படி கிரைய ஆவணம் 1 ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு காலம்சென்ற கணபதிகவுண்டரால் கடந்த 20.05.1963 ம் தேதி ஏற்படுத்தப்பட்ட உயில்சாசனத்திற்கு விரோதமாகும். தாவா சொத்தின் முழு விஸ்தீரணமானது சூலூர் வட்டம், மோப்பிரிபாளையம் கிராமம், க.ச.எண்.266 நெ.காலையில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணம் பு.ஏ. 11.96 ஆகும். மேற்படி மொத்த விஸ்தீரணமும் ஆதியில் மனுதாரரின் தந்தையைப் பெற்ற தகப்பனாரான கணபதிகவுண்டருக்கு ஆவண எண். 225/1927 ன் படியான கிரைய ஆவணத்தின் மூலம் கிரைய பாத்தியப்பட்டு பின்னிட்டு மேற்படி விஸ்தீரணத்தை கணபதிகவுண்டரும், அவரது சகோதரர் சின்னதம்பிகவுண்டரும் தங்களுடைய கூட்டுக் குடும்ப சொத்தாக வைத்து அனுபவம் செய்து வந்து பின்னிட்டு மேற்படி

இருவரும் மேற்படி காலையில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணத்தை இரண்டு சமபாகங்களாக பிரித்து அதில் 1 வது அயிட்ட சொத்தாக மேல்புறமாயும் தென்வடலாய் பு.ஏ.5.95 விஸ்தீரணமானது கணபதிகவுண்டருக்கும், மீதமுள்ள விஸ்தீரணமானது சின்னதம்பிகவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது.

1.3). அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் சுவாதீனம் கொண்டு வந்து, பின்னிட்டு மனுதாரரின் தந்தையைப் பெற்ற தந்தை கணபதிகவுண்டர் சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அனுபவம் செய்து வந்து பின்னிட்டு மேற்படி கணபதிகவுண்டருக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்து உட்பட இதர சொத்துக்களைப் பொறுத்து கடந்த 20.05.1963 ம் தேதி அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.16/1963 ன் படி தன்னுடைய நான்கு மக்களான துரைசாமிகவுண்டர்-1, ரங்கசாமிகவுண்டர்-2, முத்துச்சாமிகவுண்டர்-3, ரத்தினசாமிகவுண்டர் -4 ஆகிய நான்கு பேர்களுக்கும் ஒரு உயில்சாசனத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார்.

1.4). மேற்படி ரத்தினசாமிகவுண்டர் மனுதாரரின் தந்தை ஆவார். மேற்படி உயில்சாசனத்தில் தாவா சொத்தும் அதன் முழு விஸ்தீரணமான க.ச.எண். 266 நெ. காலையில் கட்டுப்பட்ட பு.ஏ. 5.95 விஸ்தீரணமானது "B" ஷெடியூல் சொத்தாக மனுதாரரின் பெரியப்பா ரங்கசாமிகவுண்டருக்கு ஒதுக்கி அதில் மனுதாரரின் தந்தையைப் பெற்ற தாத்தா கணபதிகவுண்டர் மேற்படி உயில்சாசனத்தில் ரங்கசாமிகவுண்டருக்கு ஒதுக்கப்படுகின்ற விஸ்தீரணங்களில் குறிப்பாக க.ச.எண்.266 நெ. காலையில் கட்டுப்பட்ட பு.ஏ.5.95 விஸ்தீரணத்தை மேற்படி ரங்கசாமிகவுண்டரும் அவரது வாரிசுகளும் எவ்வித பந்தக பராதீனத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையோடு தனது விருப்பத்தை பதிவு செய்து வைத்து, மேற்படி கணபதிகவுண்டர் தன்னுடைய வாழ்நாளில் மேற்படி உயில்சாசனத்தை மாற்றவோ, ரத்தோ செய்யாமல் கடந்த 29.10.1973 ம் தேதி

காலமாகிவிட்டார்.

1.5). மேற்படி உயில்சாசனமானது நடைமுறைக்கு வந்து, உயில்சாசனத்தில் சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்கள் படி மனுதாரரின் தாத்தா கணபதிகவுண்டருக்கு பிறந்த நான்கு ஆண் மக்களும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட விஸ்தீரணங்களை அவரவர்கள் சுவாதீனம் கொண்டு அனுபவம் செய்து வந்ததில் க.ச.எண். 266 நெ. காலையில் பு.ஏ.5.95 விஸ்தீரணத்தை ரங்கசாமிகவுண்டர் அனுபவம் செய்து வந்த நிலையில், மேற்படி விஸ்தீரணத்தை அபகரிக்க வேண்டுமென நினைத்த கணபதிகவுண்டரின் 3ம் மகனான முத்துச்சாமிகவுண்டர் மேற்படி விஸ்தீரணமானது தன்னுடைய தந்தை கணபதிகவுண்டர் காலமான பின்பு தனது சகோதரர்களுடன் செய்து கொண்ட வாய்மொழி ஒப்பந்தத்தின் படி தனக்கு ஒதுக்கப்பட்டதாக கூறி கணபதிகவுண்டர் தனது சகோதரர் சின்னதம்பிகவுண்டருடன் செய்து கொண்ட பாகசாசன ஆவண எண். 453/1927 ஐ மூல ஆவணமாக குறிப்பிடாமல் கணபதிகவுண்டர் மேற்படி பாகசாசனத்திற்கு முன்பாக கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.225/1927 ஐ மூல ஆவணமாக காட்டி நடைமுறைக்கு வந்த உயில்சாசன ஆவண எண். 16/1963 ஐ மறைத்து கடந்த 06.04.1985ம் தேதி மேற்படி மனுதாரரின் பெரியப்பா முத்துசாமிகவுண்டர் தன்னுடைய மகள்களான மேகலா, மல்லிகா, சித்ரா ஆகிய மூவருக்கும் ஒரு செல்லாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார்.

1.6). மேற்படி செல்லாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து மனுதாரரின் பெரியப்பா முத்துசாமிகவுண்டரின் மூன்று பெண் மக்களும் சேர்ந்து மேற்படி போலியான செட்டில்மெண்ட் ஆவணத்தை மூல ஆவணமாக காட்டி கடந்த 23.01.2007ம் தேதி கருமத்தம்பட்டியை சேர்ந்த தங்கவேல்-1, ராமசாமி-2, சின்னசாமி-3, கணேசமூர்த்தி-4, A.சந்திரசேகரன் -5, C.சந்திரசேகர் 6 ஆகிய ஆறுபேர்களுக்கும் ஒரு

செல்லாத கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இந்த ஆவணங்கள் ஒருபுறம் இருக்க மேற்படி உயில்சாசனம் நடைமுறைக்கு வந்ததால், உண்மையிலேயே உயில்சாசனத்தில் மேற்படி விஸ்தீரணமானது மனுதாரரின் பெரியப்பா ரங்கசாமிகவுண்டருக்கு, மேற்படி ரங்கசாமிகவுண்டரும் அவரது வாரிசுகளும் மேற்படி விஸ்தீரணத்தை எவ்விதத்திலும் பந்தக பராதீனம் செய்யக் கூடாது என விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையை மறைத்து, மேற்படி ஷரத்துக்களை மீறி மேற்படி ரங்கசாமிகவுண்டர் காலமான பின்பு அவரது மகனான வெங்கடாசலபதி, தன்னுடன் பிறந்த சகோதர சகோதரரிகளிடம் பொது அதிகாரம் பெற்று கடந்த 20.11.2006 ம் தேதி ஆவண எண். 3297/2007 ன் படி விஜயகுமார் என்பவருக்கு ஒரு செல்லா நிலையுடைய கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

1.7). மேற்படி கிரைய ஆவணத்தில் மேற்படி உயில்சாசனம் தான் மூல ஆவணமாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஆவணமானது உயில்சாசன ஷரத்துக்களை மீறி ஏற்படுத்தப்பட்ட ஆவணமாகும். இந்நிலையில், ஒரே சொத்திற்கு வாய்மொழி ஒப்பந்தத்தின் படி தனக்கு கிடைத்ததாக கூறி முத்துச்சாமிகவுண்டரும், அவரது வாரிசுகளும் போலி ஆவணங்களை ஏற்படுத்தியும், அதே போல உயில்சாசன ஷரத்துக்களை மீறி ரங்கசாமிகவுண்டரின் வாரிசுகள் விஜயகுமார் என்பவருக்கு ஒரு செல்லா நிலையுடைய கிரைய ஆவண எண் 3291/2007 ன் படி ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இந்நிலையில்,மேற்படி விஜயகுமார் ஒரே சொத்திற்கு இரண்டு Title ஆவணம் இருப்பதை உணர்ந்து ரங்கசாமிகவுண்டரின் வாரிசுகளிடம் கிரையம் பெற்ற விஜயகுமார், முத்துச்சாமிகவுண்டரின் வாரிசுகள் கிரையம் கொடுத்த தங்கவேல்-1, ராமசாமி-2, சின்னசாமி-3, கணேசமூர்த்தி-4, A.சந்திரசேகரன்-5, C.சந்திரசேகர் - 6 ஆகிய ஆறு பேர்கள் பெற்ற கிரைய ஆவணத்தை ஏற்று தனக்கு க.ச.எண். 266 ரெ.காலையில் இருப்பதாக கூறும் உரிமையை விடுதலை செய்து கொடுப்பதாக ஒத்துக் கொண்டு ஒரு செல்லா நிலையுடைய பாகபாத்திய விடுதலை ஆவணத்தை மேற்படி ஆறு பேர்களுக்கும் கடந்த 12.06.2008 ம் தேதி அன்னூர்

சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 3714/2008 ன் படி ஒரு பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

1.8). இந்த பாகபாத்திய விடுதலை ஆவணமும் செல்லா நிலையுடைய ஆவணமாகும். இந்நிலையில், மேற்படி செல்லாநிலையுடைய பாகபாத்திய விடுதலை ஆவணத்தை மூல ஆவணமாக வைத்து மேற்படி ஆறு நபர்களும் 1ம் எதிர்மனுதாரர்/ வாதிக்கு கடந்த 12.06.2008ம் தேதி தாவா சொத்தைப் பொறுத்து ஒரு செல்லா நிலையுடைய கிரைய ஆவணத்தை அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 3722/2008 ன் படி ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். 1 ம் எதிர்மனுதாரர்/ வாதி பெற்ற கிரைய ஆவணமும் நடைமுறைக்கு வர முடியாத ஒன்றாகும்.

1.9). இந்நிலையில் நடைமுறைக்கு வர முடியாத, செல்லா நிலையுடைய கிரைய ஆவணத்தை வைத்துக் கொண்டு 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் மற்ற எதிர்மனுதாரர்கள் பொய்யான தகவலை அளித்து லோக் அதாலத் மூலம் தீர்ப்பாணையும், கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டதாக கூறி வழக்குமூலம் எழாமலேயே தாவா அசல் வழக்கை 1ம் எதிர்மனுதாரர்/ வாதி மூல ஆவணத்தையும், அதில் சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்களையும் ஒரு அதில் வழக்கறிஞர் மூலம் சட்டக்கருத்துரை பெறாமலேயே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் கிரைய ஆவணத்தில் மூலமானது மனுதாரரின் பெரியப்பா முத்துச்சாமியால் உயில்சாசனத்தை மறைத்து தனக்கு வாய்மொழி ஒப்பந்தப்படி கிடைக்கப்பெற்றதாக பொய்யாக கூறி தனது பெண் மக்களுக்கு ஏற்படுத்தி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை மூல ஆவணமாக கொண்டு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணமாகும்.

1.10). ஆனால், மேற்படி முத்துச்சாமிகவுண்டருக்கு மேற்படி உயில்சாசனத்தில் ஒதுக்கப்பட்ட தாவா சொத்து அல்லாத மற்ற விஸ்தீரணங்களை உயில்சாசன வரத்துக்கள் படி சுவாதினம் கொண்டு முத்துச்சாமிகவுண்டர் காலமான பின்பு அவரது வாரிசுகள் அனுபவம் செய்து விற்பனையும் செய்துவிட்டனர். எனவே. மேற்படி சங்கதிகளை கணபதிகவுண்டரின் மகன் வழிப் பேரன் என்ற முறையில் மேற்படி உயில்சாசனத்தில் மனுதாரரின் தந்தையும் ஒரு தரப்பினராக இருப்பதால், தாவா வழக்கில் 1ம் எதிர்மனுதரர்/வாதியால் மறைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டியது மனுதாரரின் கடமையாகும்.

1.11). மேலும், மேற்படி உயில்சாசனத்தின் படி மனுதாரரின் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சூலூர் வட்டம், அரசூர் கிராமம்,க.ச.எண்.5, 6, 7, 8 காலைகளைப் பொறுத்து ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் மு.வ.எண். 855/2017 ல் வழக்கு நிலுவையிலிருந்து வருகிறது. மனுதாரரின் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியும் மேற்படி விஸ்தீரணத்தில் தங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை தெரிந்து கொண்டே தங்களையும் கட்சிக்காரர்களாக இணைத்து வழக்கில் எதிர்வியாஜ்ஜியம் செய்து வருகின்றனர். 1ம் எதிர்மனுதாரர்/வாதி தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. அவர்களுக்கு தாவா சொத்தில், சொத்து மாற்று உரிமை சட்டம் பிரிவு 54 மற்றும் 55 ன் படி எவ்வித உரிமையும் ஏற்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்தைப் பொறுத்து Bonafide Purchaser இல்லை. எனவே, மனுதாரருக்கு தாவா வழக்கில் சரியான எதிர்வியாஜ்ஜியம் இருந்து வருவதால் மனுதாரரையும் தாவா அசல் வழக்கில் 19 வது பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாத பட்சத்தில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும்.

1.12). மேலும், கணபதிகவுண்டரும், சின்னதம்பிகவுண்டரும் ஏற்படுத்திக் கொண்ட பாகசாசனத்தில் கணபதிகவுண்டருக்கு "A" ஷெடியூலாக ஒதுக்கப்பட்ட விஸ்தீரணமானது க.ச.எண். 266 நெ. காலையில் பு.ஏ.5.95 விஸ்தீரணம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதே விஸ்தீரணத்திற்கு தான் கணபதிகவுண்டருக்கு தான் ஏற்படுத்தி வைத்த உயில்சாசன எண்.16/1963 ல் தன்னுடைய மகன் ரங்கசாமிகவுண்டருக்கு மேற்படி விஸ்தீரணத்தை "B" ஷெடியூலாக ஒதுக்கியுள்ளார். ஆனால், முத்துச்சாமிகவுண்டர் தன்னுடைய பெண் மக்களுக்கு ஏற்படுத்தி வைத்த போலி செட்டில்மெண்ட் ஆவணத்தில் க.ச.எண்.266 நெ.காலையில் தங்களுக்கு பு.ஏ.6.22 விஸ்தீரணம் தனக்கு வாய்மொழி ஒப்பந்தத்தின் படி ஒதுக்கப்பட்டதாக கூறியிருப்பதன் மூலம் சின்னதம்பிகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட விஸ்தீரணத்தில் பு.ஏ.0.27 விஸ்தீரணத்தை அபகரித்து ஏற்படுத்தப்பட்ட போலி செட்டில்மெண்ட் ஆவணமாகும். எனவே அதடினப்படையில் தங்கள் வசதிக்கு ஏற்றாற்போல் விஸ்தீரணம் ஏற்படுத்திக் கொண்ட போலி மூல ஆவணங்களின் படி ஏற்படுத்தப்பட்ட 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் கிரைய ஆவணமும் போலி கிரைய ஆவணம் ஆகும். மனுதாரருக்கு தாவா மனுவில் சீர் நிலை நோக்கும் முதல் நிலை நோக்கும் சாதகமாக இருந்து வருகிறது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

2.1). மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஏற்றுக் கொண்ட சங்கதிகளைத் தவிர பிற சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். வழக்கு பரிகாரம் கோரியும், வாதி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்கள் உண்மையானவை என ஒப்புக்கொள்ளப்படுகின்றன. இவ்வழக்குச் சொத்தின் மீது மனுதாரருக்கு எவ்விதமான உரிமைத் தகுதியும் (title) இல்லாத காரணத்தினால், இம்மனு விசாரணைக்கு உகந்ததல்ல. ஆகையால், இம்மனு ஆரம்ப நிலையிலேயே (in limine) தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

2.2). சர்வே எண் 266-ல் அமைந்துள்ள 11.96 ஏக்கர் பரப்பளவிலான நிலமானது, ஆரம்பத்தில் கணபதி கவுண்டரால் கிரையம் பெறப்பட்டது. பின்னர் மூதாதையர் சொத்தாகக் கருதப்பட்டு, அதன் அடிப்படையில் கணபதி கவுண்டரின் சகோதரரான சின்னத்தம்பி கவுண்டருக்கு அதில் பாதிப் பங்கு வழங்கப்பட்டது. ஆகையால், வழக்குச் சொத்தானது மூதாதையர் சொத்தாகவே கருதப்பட்டது என்பதும்; அதன் விளைவாக, அவரது தந்தையும் நான்கு மகன்களும் கூட்டுக் குடும்பச் சொத்துரிமையாளர்களாக (co-parceners) உரிமை பெற்றனர் என்பதும், அதன் மூலம் கூட்டுக் குடும்பத்திற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களிலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 1/5 பங்கு உரிமை கிடைத்தது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். மேற்படி கணபதி கவுண்டர், கூட்டுக் குடும்பத்திற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் பங்கிடும் விதமாக, 20.05.1963 தேதியிட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட உயிலை (Will) எழுதி நிறைவேற்றினார். அவ்வுயிலின் வாயிலாக, அவரது மகன்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட சொத்துக்கள் முழுமையான உரிமையுடன் தனித்தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டன. மேலும், மகன்கள் அனைவருக்கும் உயிலில் விவரிக்கப்பட்டுள்ளபடியே சொத்துக்கள் வழங்கப்பட்டிருந்ததால், கணபதி கவுண்டரும் அந்த உயிலை ஏற்றுக்கொண்டார்.

2.3). இந்நிலையில், நான்கு மகன்களில் ஒருவரான ரங்கசாமி கவுண்டருக்கு, 'B' அட்டவணைச் சொத்துக்கள் சர்வே எண் 266-ல் உள்ள 5.95 ஏக்கர் நிலம் உட்பட மற்றும் பிற சொத்துக்கள் உயில் மூலம் வழங்கப்பட்டன. அத்துடன், அங்குள்ள சிறிய கோவில்களில் விளக்கு ஏற்றும் சேவையைச் செய்யுமாறு தந்தை கணபதி கவுண்டர் ஒரு அறிவுறுத்தலையும் வழங்கியிருந்தார். இது ஏதேனும் அறப்பணி அல்லது தர்மஸ்தாபனச் செயல்பாடு என்றோ, அல்லது தெய்வத்திற்குச் செய்யப்படும் கொடை என்றோ பொருள்படாது. எனவே, உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் அந்தக் கட்டுப்பாட்டு நிபந்தனை (restriction

clause) கட்டாயமானதல்ல. மாறாக, அது ஒரு தார்மீகக் கடமை சார்ந்ததே ஆகும். எவ்வாறாயினும், இது குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் ரங்கசாமி கவுண்டரின் குடும்பத்தினருக்கே உரியது. மனுதாரர் 'D' அட்டவணைச் சொத்துக்களைப் பெற்ற ரத்தினசாமி கவுண்டரின் மகன் ஆவார். எனவே, வழக்குச் சொத்தின் மீது மனுதாரருக்குச் சொத்துரிமைக்கான எந்தவொரு அடிப்படைத் தகுதியோ அல்லது சாயலோ கூட இல்லை.

2.4). ரங்கசாமி கவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளான வெங்கடாசலபதி தன்னுடைய சார்பிலும், தனது சகோதரிகளான விஜயகுமார் மற்றும் S. தேவி ஆகியோரின் அதிகார முகவராகவும் செயல்பட்டு, மேற்படிச் சொத்தை ஒரு விஜயகுமார் என்பவருக்கு, உரிய விலை பெற்றுக்கொண்டு, விற்பனைப் பத்திரம் ஆவண எண் 3291/2007)மூலம் விற்றுவிட்டனர். உயிலில் உண்மையில் ஏதேனும் கட்டுப்பாட்டு நிபந்தனை இருந்திருக்குமேயானால், ரங்கசாமி கவுண்டரின் வாரிசுகள் அந்தச் சொத்தை விற்றிருக்கவே மாட்டார்கள். மனுவைத் தாக்கல் செய்வதற்கான சட்டரீதியான தகுதி (locus standi) மனுதாரருக்கு இல்லை.

2.5). வழக்குச் சொத்தின் மீதான சொத்துரிமையை குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் ரங்கசாமி கவுண்டரின் குடும்பத்தினருக்கே உரியதே தவிர, இந்த மனுதாரரின் குடும்பத்தினருக்கு அல்ல. மேலும், கணபதி கவுண்டரின் மற்ற மூன்று மகன்களான துரைசாமி கவுண்டர், முத்துசாமி கவுண்டர் மற்றும் ரத்தினசாமி கவுண்டர் (மனுதாரரின் தந்தை) ஆகியோருக்கு வழக்குச் சொத்தின் மீது எந்தவிதமான உரிமையும் வழங்கப்படவில்லை. இத்தகைய சூழலில், எவ்விதமான சொத்துரிமையோ அல்லது சட்டரீதியான உரிமையோ இல்லாத நிலையில், மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2.6). மனுதாரர் மேலும் ஒப்புக்கொள்வது என்னவென்றால், அவருடைய தந்தையின் சகோதரர்களில் ஒருவரான முத்துசாமி கவுண்டர், வழக்குச் சொத்தை மூதாதையர் சொத்தாகக் கருதி, வாய்மொழிப் பாகப்பிரிவினை மூலம் அதைப் பெற்று, அதன் மூலம் 06.04.1985 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரத்தின் கீழ் தனது மூன்று மகள்களுக்கு அதை வழங்கினார். அவர்கள் அதை 23.01.2007 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் கீழ் தங்கவேல் மற்றும் மேலும் 5 பேருக்குப் பரிசீலனைக்கு விற்றனர். பின்னர், காலஞ்சென்ற ரங்கசாமியின் சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து அதே சொத்தை வாங்கிய விஜயகுமார், 12.06.2008 தேதியிட்ட விடுதலைப் பத்திரத்தின் கீழ் தங்கவேல் மற்றும் பிறருக்கு ஆதரவாக அதை விடுவித்து, அவர் அதை, விற்பனைப் பத்திர எண். 3722/2008-ன் கீழ் இந்த எதிர்மனுதாரருக்கு விற்றார்.

2.7). வழக்குச் சொத்தின் மீதான இந்த எதிர்மனுதாரரின் உரிமையை, மனுதாரர் முன்பே நன்கு அறிந்திருந்தார். மறுபுறம், இந்த எதிர்மனுதாரர்கள் தங்கள் உரிமையை மெய்ப்பிக்கும் பொருட்டு, 20.05.1963 தேதியிட்ட உயிலைச் சார்ந்திருந்தனர். அந்த உயிலின் அசல் ஆவணம் இந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள் கோரும் அதே நிவாரணத்தைக் கோரி மனுதாரரே தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.855/2017 வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உண்மையில், அசல் வழக்கு எண்.855/2017 வழக்கில் எதிர்மனுதாரர்கள் தங்களை இணைத்துக்கொள்ளக் கோரி மனு தாக்கல் செய்ததால் ஆத்திரமடைந்த மனுதாரர், இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

2.8). இந்த வழக்கு ஒரு பொதுநல வழக்கோ அல்லது பிரதிநிதித்துவ வழக்கோ அல்ல. மாறாக, இது ஒரு உரிமை சார்ந்த வழக்கு (Title suit) ஆகும். இதில் 2 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் மட்டுமே சம்பந்தப்பட்டவர்களாவர். மற்ற எவருக்கும் இதில் தொடர்பில்லை. வழக்குச் சொத்தின் மீது மனுதாரருக்கு உண்மையில் ஏதேனும் உரிமையோ அல்லது நலனோ இருந்து, அது

பாதிக்கப்படுவதாக அவர் கருதினால், தனது உரிமையை நிலைநாட்டிக்கொள்ளும் வகையில் தன்னை இந்த வழக்கில் இணைத்துக்கொள்ள அவருக்கு உரிமை உள்ளது. இருப்பினும், இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பாகச் சில உண்மைகளை நீதிமன்றத்தின் முன் கொண்டுவர விரும்புவதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகள், மனுதாரரின் கடமை வரம்பிற்குள் வருவன அல்ல. ஏனெனில், இந்த எதிர்மனுதாரரின் கோரிக்கையைப் பொறுத்தவரை மனுதாரர் ஒரு மூன்றாம் தரப்பினராகவே உள்ளார்.

2.9). எதிர்மனுதாரர்கள் கணபதி கவுண்டரின் நான்கு மகன்களில் இருவரின் சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து உரிமையைப் பெற்றிருந்த உண்மையான உரிமையாளர்களிடமிருந்தே, வழக்குச் சொத்தை விலைக்கு வாங்கியுள்ளனர். மறைந்த கணபதி கவுண்டரின் மகள்களான சிவகாமி மற்றும் துளசியம்மாள் ஆகியோருக்கு, எவ்விதச் சொத்துக்களும் உயில் மூலம் எழுதிவைக்கப்படாத நிலையில், அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் ஒரு மோசடிச் செயலைத் திட்டமிட்டுள்ளனர். அதன்படி, 19.12.1974 தேதியிட்ட, பதிவு செய்யப்படாத மற்றொரு உயில் ஆவணத்தை அவர்கள் போலியாக உருவாக்கியுள்ளனர். அந்தப் போலி உயிலின் அடிப்படையில், கோவை 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 2216/2012-ன் கீழ் ஒரு வழக்குத் தொடர்ந்த அவர்கள், தவறான பெயர்களைப் பயன்படுத்தி, இந்த எதிர்மனுதாரரின் அறியாமலேயே வழக்குச் சொத்து தொடர்பாக ஒரு கூட்டுச் சதித் தீர்ப்பைப் (collusive decree) பெற்றுள்ளனர். தற்போது இந்த எதிர்மனுதாரர் மேற்கண்ட வழக்கை (தற்போதைய வழக்கு) தாக்கல் செய்வதன் மூலம் அத்தீர்ப்பு குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

2.10). வழக்குச் சொத்தின் மீதான 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களின் உரிமை குறித்து மனுதாரர் நன்கு அறிந்திருந்தும், தற்போது பழிவாங்கும்

எண்ணத்திலேயே அசல் வழக்கு எண் 855/2017 வழக்கில் இந்த எதிர்மனுதாரர்களையும் ஒரு தரப்பாகச் சேர்க்கும் நோக்கத்துடன், ஒரு எதிர் நடவடிக்கையாக (counter blast) இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரங்கசாமி கவுண்டரின் குடும்பத்தினர் சொத்தில் வில்லங்கப்படுத்த எந்தச் சட்டப்பூர்வத் தடையும் இல்லை. மேலும், மேலே குறிப்பிட்டபடி ரங்கசாமி கவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளும் அதை விற்றுள்ளனர், அதன் மீது மனுதாரருக்கு எந்த உரிமையும் வழங்கப்படாததால், அது குறித்து கேள்வி எழுப்ப முடியாது.

2.11). இந்த வழக்கு தனிநபர் மீதான உரிமை (Jus in Personam) வகையைச் சேர்ந்தது, பொருள் மீதான உரிமை (Jus in Rem) அல்ல. எனவே, இந்த மனு சட்டப்படியும் வழக்கின் உண்மைகளின்படியும் ஏற்கத்தக்கதல்ல. மேலும், இந்த வழக்கை என்றென்றைக்குமாக இழுக்கும் நோக்கத்திற்காக மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து கூட்டுச் சதியில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.12). மேலும், மனுதாரரின் தாயார் மரகதம் ஏற்கனவே அசல் வழக்கு எண்.4/2011 ல் ஒரு வழக்கைத் தாக்கல் செய்து சொத்துக்களின் மீது பாகப்பிரிவினை கோரி மனுதாரர் ஒரு தரப்பினராக உள்ளார். எனவே, வழக்குச் சொத்து தொடர்பான இந்த எதிர்மனுதாரரின் உரிமை குறித்து அவர் நன்கு அறிந்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், வழக்குச் சொத்தின் கிரையம் பெற்றவரான வெங்கடாச்சலம், மேற்கூறிய பாலசுப்பிரமணியத்துடன் கூட்டுச் சதி செய்து, இந்த மனுதாரர் ஏற்கனவே வழக்குச் சொத்தை விலைக்கு வாங்கிய உரிமையாளராக இருந்தபோதிலும், அசல் வழக்கு எண்.2216/2012-ல் தீர்ப்பைப் பெற உதவியுள்ளார். இந்த மனு, வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிப்பதற்காக மட்டுமே உள்ளது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3). 19 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

3.1). மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தனது பிரமாணப் பத்திரத்தில் இடைக்கால மனு எண் 45/2026 ல் கூறியுள்ள கூற்றுகளை, இதில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவற்றைத் தவிர, 18 ம் எதிர்மனுதாரர் மறுக்கின்றார், மேலும் மனுதாரர் அவற்றிற்கு உறுதியான ஆதாரத்தைக் காட்ட வேண்டும். 18 ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 3-ல் அடங்கியுள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "உண்மையிலேயே 1 எதிர்மனுதாரர்/வாதி பெற்ற கிரைய ஆவணமே சட்டப்படி செல்லுபடியாகாத கிரைய ஆவணமாகும். மேற்படி கிரைய ஆவணமானது பொய்யான தகவலின் பேரில் பதிவுக்கு ஏற்கப்பட்ட ஆவணமாகும்" என சொல்லியுள்ளார்.

3.2). 18 ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 4-ல் அடங்கியுள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "உண்மையிலேயே, தாவா சொத்தின் முழு விஸ்தீரணமானது சூலூர் வட்டம், மோப்பிரிபாளையம் கிராமம், க.ச.எண். 266 நெ.காலையில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணம் பு.ஏ.11.96 ஆகும். மேற்படி மொத்த விஸ்தீரணமும் ஆதியில் எதிர்மனுதாரரின் தந்தையைப் பெற்ற தகப்பனாரான கணபதிகவுண்டருக்கு கிரைய ஆவணத்தின் மூலம் கிரைய பாத்தியப்பட்டு பின்னிட்டு மேற்படி விஸ்தீரணத்தை கணபதிகவுண்டரும், அவரது சகோதரர் சின்னதம்பிகவுண்டரும் தங்களுடைய கூட்டுக் குடும்ப சொத்தாக வைத்து அனுபவம் செய்து வந்து பின்னிட்டு மேற்படி இருவரும் மேற்படி காலையில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணத்தை இரண்டு சமபாகங்களாக பிரித்து அதில் 1 வது அயிட்ட சொத்தாக மேல்புறமாயும் தென்வடலாய் பு.ஏ.5.95 விஸ்தீரணமானது கணபதிகவுண்டருக்கும், மீதமுள்ள விஸ்தீரணமானது சின்னதம்பிகவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டு, அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் சுவாதீனம் கொண்டு வந்து, பின்னிட்டு எனது தந்தையைப் பெற்ற தந்தை கணபதிகவுண்டர் சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அனுபவம் செய்து வந்து பின்னிட்டு மேற்படி கணபதிகவுண்டருக்கு பாத்தியப்பட்ட

மேற்படி சொத்து உட்பட இதர சொத்துக்களைப் பொறுத்து கடந்த 20.05.1963 ம் தேதி அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 16/1963 ன் படி தன்னுடைய நான்கு மக்களான துரைசாமிகவுண்டர்-1, ரங்கசாமிகவுண்டர்-2, முத்துச்சாமிகவுண்டர்-3, ரத்தினசாமிகவுண்டர்-4 ஆகிய நான்கு பேர்களுக்கும் ஒரு உயில்சாசனத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார்" என சொல்லியுள்ளார்.

3.3). ஆனால், மேற்கூறிய கணபதி கவுண்டர், தனது மகன்கள் தனது ஆயுள் வரை தன்னைக் கவனித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை ஆகும். ஆவணம் எண் 16/1963 கொண்ட மேற்கூறிய உயிலை எழுதினார். ஆனால், துரைசாமி கவுண்டர் என்ற ஒரு மகனைத் தவிர, மற்ற அனைவரும் கணபதி கவுண்டரைக் கவனிக்கவில்லை. எனவே, கணபதி கவுண்டர், ஆவணம் எண் 16/1963 கொண்ட மேற்கூறிய உயிலை ரத்து செய்து, 1974 ஆம் ஆண்டில் துரைசாமி கவுண்டருக்குச் சாதகமாக உயிலை எழுதினார்.

3.4). 18 ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 4-ல் உள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "மேற்படி ரத்தினசாமி கவுண்டர் எனது தந்தை ஆவார். மேற்படி உயில்சாசனத்தில் தாவா சொத்தும் அதன் முழு விஸ்தீரணமான க.ச.எண். 266 நெ. காலையில் கட்டுப்பட்ட பு.ஏ.5.95 விஸ்தீரணமானது "B" ஷெடியூல் சொத்தாக எனது பெரியப்பா மேற்படி ரங்கசாமிகவுண்டருக்கு ஒதுக்கி அதில் எனது தந்தையைப் பெற்ற தாத்தா கணபதிகவுண்டர் மேற்படி உயில்சாசனத்தில் ரங்கசாமிகவுண்டருக்கு ஒதுக்கப்படுகின்ற விஸ்தீரணங்களில் குறிப்பாக க.ச.எண்.266 நெ. காலையில் கட்டுப்பட்ட பு.ஏ. 5.95 விஸ்தீரணத்தை ரங்கசாமிகவுண்டரும் அவரது வாரிசுகளும் எவ்வித பந்தக பராதீனத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையோடு தனது விருப்பத்தை பதிவு செய்து வைத்தார்" என சொல்லியுள்ளார்.

3.5). மனுதாரர், தீய எண்ணத்துடன், கணபதி கவுண்டர் 1973-ம் ஆண்டில் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளார். வெங்கம்மா ரவுத் என்பவர் 1974-ம் ஆண்டில்

ஒரு 'ரசீது' நிறைவேற்றினார், அதிலும் மேற்கூறிய கணபதி கவுண்டர் சாட்சிகளில் ஒருவராகக் கையெழுத்திட்டார். பத்தி எண் 5-ல் மனுதாரர் கூறியது போல், கணபதி கவுண்டர் 1973-ஆம் ஆண்டில் இறந்துவிட்டார் என்றால், அவர் எப்படி ஒரு சாட்சியாக மேற்கூறிய "ரசீது" கையெழுத்திட்டார்?

3.6). மனுதாரர் வழக்குச் சொத்தையும் வேறு சில சொத்துக்களையும் அபகரிக்கும் நோக்கில் மட்டுமே, தந்திரமாகவும் வேண்டுமென்றே இறந்த தேதியை மாற்றியுள்ளார், அது உண்மையில் ஒரு பொய்யான தேதியாகும். மேலும் கணபதி கவுண்டர், தனது மகன்கள் தனது ஆயுள் வரை தன்னைக் கவனித்துக் கொள்வார்கள் என்று நம்பி, துரைசாமி கவுண்டர், ரங்கசாமி கவுண்டர், முத்துசாமி கவுண்டர் மற்றும் ரத்தினசாமி கவுண்டர் ஆகிய தனது நான்கு மகன்களுக்கு ஆதரவாக ஒரு உயிலை நிறைவேற்றியுள்ளார். ஆனால், துரைசாமி கவுண்டர் என்ற ஒரு மகனைத் தவிர, ரங்கசாமி கவுண்டர், முத்துசாமி கவுண்டர் மற்றும் ரத்தினசாமி கவுண்டர் ஆகிய மற்ற மூன்று மகன்களும் அவரைக் கவனித்துக் கொள்ளாததால், அவரது நம்பிக்கை தவறானது. இதன் விளைவாக, கணபதி கவுண்டர், தனது வாழ்நாளில், ஆவணம் எண் 16/1963 கொண்ட உயிலை ரத்து செய்து, 1974-ம் ஆண்டில் தனது மூத்த மகனான துரைசாமி கவுண்டருக்கு ஆதரவாக ஒரு உயிலை நிறைவேற்றினார்.

3.7). 18ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 4-ல் உள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "மேற்படி விஸ்தீரணத்தை அபகரிக்க வேண்டுமென நினைத்த எனக்கு பெரியப்பாவும், கணபதிகவுண்டரின் 3-ம் மகனுமான முத்துச்சாமிகவுண்டர் மேற்படி விஸ்தீரணமானது தன்னுடைய தந்தை கணபதிகவுண்டர் காலமான பின்பு சகோதரர்களுடன் செய்து கொண்ட வாய்மொழி ஒப்பந்தத்தின் படி தனக்கு ஒதுக்கப்பட்டதாக கூறி கணபதிகவுண்டர் தனது சகோதரர் சின்னதம்பிகவுண்டருடன் செய்து கொண்ட பாகசாசன ஆவண எண். 453/1927 குறிப்பிடாமல் கணபதிகவுண்டர் மேற்படி பாகசாசனத்திற்கு முன்பாக கிரையம் பெற்ற

கிரைய ஆவண எண். 225/1927 ஐ மூல ஆவணமாக காட்டி நடைமுறைக்கு வந்த உயில்சாசன ஆவண எண் 16/1963 ஐ மறைத்து கடந்த 06.04.1985 ம் தேதி மேற்படி எனது பெரியப்பா முத்துசாமிகவுண்டர் தன்னுடைய மகள்களான மேகலா, மல்லிகா, சித்ரா ஆகிய மூவருக்கும் ஆவண எண் 601/1985 ன் படி ஒரு செல்லாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார்" என சொல்லியுள்ளார். உண்மையில் அவர்களுக்கு இடையே எந்தப் பாகப்பிரிவினையும் செய்யப்படவில்லை, மேலும் அந்தப் பாகப்பிரிவினைக்கான சட்டப்பூர்வ ஆவணங்களும் இல்லை. எனவே, கூறப்பட்ட வாய்மொழிப் பாகப்பிரிவினையானது உருவாக்கப்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது.

3.8). 18 ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 4-ல் அடங்கியுள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டார். "மேற்படி செல்லாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து எனது பெரியப்பா முத்துசாமிகவுண்டரின் மூன்று பெண் மக்களும் சேர்ந்து மேற்படி போலியான செட்டில்மெண்ட் ஆவணத்தை மூல ஆவணமாக காட்டி கடந்த 23.01.2007 ம் தேதி கருமத்தம்பட்டியை சேர்ந்த தங்கவேல்-1, ராமசாமி-2, சின்னசாமி-3, கணேசமூர்த்தி-4, A.சந்திரசேகரன் -5, C.சந்திரசேகர் -6 ஆகிய ஆறுபேர்களுக்கும் ஆவண எண். 383/2007 ன் படி ஒரு செல்லாத கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்" என சொல்லியுள்ளார்.

3.9). 18 ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 4-ல் அடங்கியுள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டார். "உண்மையிலேயே, உயில்சாசனத்தில் மேற்படி விஸ்தீரணமானது எனது பெரியப்பா ரங்கசாமிகவுண்டருக்கு, மேற்படி ரங்கசாமிகவுண்டரும் அவரது வாரிசுகளும் மேற்படி விஸ்தீரணத்தை எவ்விதத்திலும் பந்தக பராதீனம் செய்யக் கூடாது என விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையை மறைத்து, மேற்படி ஷரத்துக்களை மீறி மேற்படி ரங்கசாமிகவுண்டர் காலமான பின்பு அவரது மகனான வெங்கடாசலபதி, தன்னுடன் பிறந்த சகோதர சகோதரிகளிடம் பொது

அதிகாரம் பெற்று கடந்த 20.11.2006 ம் தேதி ஆவண எண். 3297/2007 ன் படி விஜயகுமார் என்பவருக்கு ஒரு செல்லா நிலையுடைய கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி கிரைய ஆவணத்தில் மேற்படி உயில்சாசனம் தான் மூல ஆவணமாக காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், ஒரே சொத்திற்கு வாய்மொழி ஒப்பந்தத்தின் படி தனக்கு கிடைத்ததாக கூறி முத்துச்சாமிகவுண்டரும் அவரது வாரிசுகளும் போலி ஆவணங்களை ஏற்படுத்தியும், அதே போல உயில்சாசன ஷரத்துக்களை மீறி ரங்கசாமிகவுண்டரின் வாரிசுகள் விஜயகுமார் என்பவருக்கு ஒரு செல்லா நிலையுடைய கிரைய ஆவண எண் 3291/2007 ன் படி ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

3.10). இந்நிலையில்,மேற்படி விஜயகுமார் ஒரே சொத்திற்கு இரண்டு Title ஆவணம் இருப்பதை உணர்ந்து ரங்கசாமிகவுண்டரின் வாரிசுகளிடம் கிரையம் பெற்ற விஜயகுமார், முத்துச்சாமிகவுண்டரின் வாரிசுகள் கிரையம் கொடுத்த தங்கவேல்-1. ராமசாமி-2. சின்னசாமி-3, கணேசமூர்த்தி-4, A.சந்திரசேகரன்-5, C.சந்திரசேகர் -6 ஆகிய ஆறு பேர்கள் பெற்ற கிரைய ஆவணத்தை ஏற்று தனக்கு க.ச.எண்.266 நெ. காலையில் இருப்பதாக கூறும் உரிமையை விடுதலை செய்து கொடுப்பதாக ஒத்துக் கொண்டு ஒரு செல்லா நிலையுடைய பாகபாத்திய விடுதலை ஆவணத்தை மேற்படி ஆறு பேர்களுக்கும் கடந்த 12.06.2008 ம் தேதி ஆவண எண். 3714/2008 ன் படி ஒரு பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இந்த பாகபாத்திய விடுதலை ஆவணமும் செல்லா நிலையுடைய ஆவணமாகும். இந்நிலையில்,மேற்படி செல்லாநிலையுடைய பாகபாத்திய விடுதலை ஆவணத்தை மூல ஆவணமாக வைத்து மேற்படி ஆறு நபர்களும் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு கடந்த 12.06.2008 ம் தேதி தாவா சொத்தைப் பொறுத்து ஒரு செல்லா நிலையுடைய கிரைய ஆவணத்தை ஆவண எண். 3888/2008 ன் படி ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். 1ம் எதிர்மனுதாரர்/வாதி பெற்ற கிரைய ஆவணமும் நடைமுறைக்கு வர முடியாத ஒன்றாகும்" என சொல்லியுள்ளார்.

3.11). 18ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 5-ல் உள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "இந்நிலையில் நடைமுறைக்கு வர முடியாத, செல்லா நிலையுடைய கிரைய ஆவணத்தை வைத்துக் கொண்டு 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் மற்ற 1ம் எதிர்மனுதாரர் பொய்யான தகவலை அளித்து லோக் அதாலத் மூலம் தீர்ப்பாணையும் கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டதாக கூறி வழக்குமூலம் எழாமலேயே தாவா அசல் வழக்கை 1ம் எதிர்மனுதாரர்/வாதி மூல ஆவணத்தையும் அதில் சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்களையும் ஒரு வழக்கறிஞர் மூலம் சட்டக்கருத்துரை பெறாமலேயே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்" என சொல்லியுள்ளார்.

3.12). 18ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 5-ல் உள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "எனவே 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் கிரைய ஆவணத்தில் மூலமானது பெரியப்பா முத்துச்சாமியால் உயில்சாசனத்தை மறைத்து தனக்கு வாய்மொழி ஒப்பந்தப்படி கிடைக்கப்பெற்றதாக பொய்யாக கூறி தனது பெண் மக்களுக்கு ஏற்படுத்தி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை மூல ஆவணமாக கொண்டு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணமாகும். ஆனால், மேற்படி முத்துச்சாமிகவுண்டருக்கு மேற்படி உயில்சாசனத்தில் ஒதுக்கப்பட்ட தாவா சொத்து அல்லாத மற்ற விஸ்தீரணங்களை உயில்சாசன ஷரத்துக்கள் படி சுவாதீனம் கொண்டு முத்துச்சாமிகவுண்டர் காலமான பின்பு அவரது வாரிசுகள் அனுபவம் செய்து விற்பனையும் செய்துவிட்டனர். எனவே, மேற்படி சங்கதிகளை கணபதிகவுண்டரின் மகன் வழிப் பேரன் என்ற முறையில் மேற்படி உயில்சாசனத்தில் எனது தந்தையும் ஒரு தரப்பினராக இருப்பதால், தாவா வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் மறைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டியது எனது கடமையாகும்" என சொல்லியுள்ளார்.

3.13). மேற்கூறிய கணபதி கவுண்டர், 7-வது எதிர்மனுதாரரின் தந்தையான துரைசாமி கவுண்டருக்கு ஆதரவாக ஒரு உயிலை எழுதியபோது மட்டுமே, வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளரானார். மேற்கூறிய கணபதி கவுண்டரின் மறைவுக்குப் பிறகு, மேலே குறிப்பிடப்பட்ட உயில் நடைமுறைக்கு வந்தது. அதன்பிறகு, மேற்கூறிய துரைசாமி கவுண்டர் வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளரானார் மற்றும் வருவாய் பதிவேடுகள் அவர் பெயரில் மாற்றப்பட்டன. மேலும், அவர் உயிருடன் இருந்தபோதே, தனது இளைய மகனான டி.பாலசுப்பிரமணியத்திற்கு ஆதரவாக, உயில் ஆவண எண் 101/1998 கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட உயிலை எழுதினார். அவரே 8-வது எதிர்மனுதாரர் ஆவார். மேற்கூறிய துரைசாமி கவுண்டர் 30.03.1998 அன்று காலமானார்.

3.14). மேற்கூறிய துரைசாமி கவுண்டரின் மறைவுக்குப் பிறகு, அந்த உயில் நடைமுறைக்கு வந்தது. மேலும், 7-வது எதிர்மனுதாரர் வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளராகி, யாருடைய இடையூறும் இன்றி அதை அனுபவித்து வந்தார். இந்தச் சூழ்நிலையில், 7ம் எதிர்மனுதாரர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தபோது, அவரைக் கவனித்துக் கொள்ள யாரும் இல்லை, அவருடைய சிகிச்சைகளுக்காக எந்தப் பணமும் செலவழிக்கவில்லை. 18ம் எதிர்மனுதாரர் மட்டுமே அவரைக் கவனித்துக் கொண்டு, தேவையான அனைத்தையும் செய்து, எந்த எதிர்பார்ப்பும் இன்றி 7ம் எதிர்மனுதாரரின் சிகிச்சைகளுக்காகத் தனது பணம் முழுவதையும் செலவழித்தார். மேலும், அன்பு மற்றும் பாசத்தின் காரணமாக, 7ம் எதிர்மனுதாரருக்கு சாதகமாக, பதிவு செய்யப்பட்ட உயில் எண் 47/2024-ஐ எழுதி வைத்தார். மேற்கூறிய 7ம் எதிர்மனுதாரரின் மறைவுக்குப் பிறகு, அந்த உயில் நடைமுறைக்கு வந்து, 18ம் எதிர்மனுதாரர் வழக்குச் சொத்தின் முழு உரிமையாளரானார்.

3.15). 18ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 6-ல் உள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "அவர்களுக்கு தாவா சொத்தில், சொத்து மாற்று உரிமை சட்டம்

பிரிவு 54 மற்றும் 55 ன் படி எவ்வித உரிமையும் ஏற்படவில்லை என்றும், இவர்கள் தாவா சொத்தைப் பொறுத்து Bonafide Purchaser இல்லை என்பதையும் இந்நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டியது கடமையாக உள்ளது" என சொல்லியுள்ளார்.

3.16). 18ம் எதிர்மனுதாரர், பத்தி எண் 6-ல் உள்ள கூற்றுகளை ஒப்புக்கொண்டு "மேலும், கணபதிகவுண்டரும், சின்னதம்பிகவுண்டரும் ஏற்படுத்திக் கொண்ட பாகசாசனத்தில் கணபதிகவுண்டருக்கு "A" ஷெடியூலாக ஒதுக்கப்பட்ட விஸ்தீரணமானது க.ச.எண். 266 நெ. காலையில் பு.ஏ. 5.95 விஸ்தீரணம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதே விஸ்தீரணத்திற்கு தான் கணபதிகவுண்டருக்கு தான் ஏற்படுத்தி வைத்த உயில்சாசன எண்.16/1963-ல் தன்னுடைய மகன் ரங்கசாமிகவுண்டருக்கு மேற்படி விஸ்தீரணத்தை "B" ஷெடியூலாக ஒதுக்கியுள்ளார். ஆனால், முத்துச்சாமிகவுண்டர் தன்னுடைய பெண் மக்களுக்கு ஏற்படுத்தி வைத்த போலி செட்டில்மெண்ட் ஆவணத்தில் க.ச.எண்.266 நெ. காலையில் தங்களுக்கு பு.ஏ.6.22 விஸ்தீரணம் தனக்கு வாய்மொழி ஒப்பந்தத்தின் படி ஒதுக்கப்பட்டதாக கூறியிருப்பதன் மூலம் சின்னதம்பிகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட விஸ்தீரணத்தில் பு.ஏ.0.27 விஸ்தீரணத்தை அபகரித்து ஏற்படுத்தப்பட்ட போலி செட்டில்மெண்ட் ஆவணமாகும்" என சொல்லியுள்ளார். மனுதாரருக்கு வழக்குச் சொத்துடன் எந்த உரிமையும் வழியும் தொடர்பு இல்லை, மேலும் அவர் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினரும் அல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4). தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

5). இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கோரி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்கா நிலுவையில் உள்ளது.

6.1). அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் வனைவதற்காக நிலுவையில் உள்ளது. மனுதாரர் தரப்பில் கணபதி கவுண்டரும், சின்னத்தம்பி கவுண்டரும் ஏற்படுத்திக் கொண்ட பாகசாசனத்தில் கணபதி கவுண்டருக்கு "A" ஷெட்யூலாக ஒதுக்கப்பட்ட விஸ்தீரனமானது க.ச.266 நம்பர் காலையில் புஞ்சை ஏக்கர 5.95 விஸ்தீரணம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதே விஸ்தீரனத்துக்கு தான் கணபதி கவுண்டருக்கு தான் ஏற்படுத்தி வைத்த உயில்சாசன எண் 16/1963 தன்னுடைய மகன் ரங்கசாமி கவுண்டருக்கு மேற்படி விஸ்தீரத்தை 'பி' செட்யூலாக ஒதுக்கியுள்ளார். ஆனால் முத்துசாமி கவுண்டர் தன்னுடைய பெண் மக்களுக்கு ஏற்படுத்தி வைத்த போலி செட்டில்மெண்ட் ஆவணத்தில் க.ச.எண் 266 நம்பர் காலையில் தங்களுக்கு புஞ்சை ஏக்கர் 6.22 விஸ்தீரணம் தனக்கு வாய்மொழி ஒப்பந்தத்தின்படி ஒதுக்கப்பட்டதாக கூறியிருப்பதன் மூலம் சின்னத்தம்பி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட விஸ்தீரனத்தில் புஞ்சை ஏக்கர் 0.27 விஸ்தீரனத்தை அபகரித்து ஏற்படுத்தப்பட்ட போலி செட்டில்மெண்ட் ஆவணமாகும் என சொல்லப்பட்டுள்ளது. மேலும் அதன் அடிப்படையில் ஏற்படுத்திக் கொண்ட போலி மூல ஆவணங்களின் படி ஏற்படுத்தப்பட்ட வாதிகளின் கிரைய ஆவணமும் போலியானது என சொல்லப்பட்டுள்ளது. இருதரப்பிலும் மனுதாரருக்கு வழக்கு சொத்தில் உரிமை இல்லை என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி விபரத்தின் உண்மைத் தன்மை குறித்து இந்த வழக்கில் கண்டறிய வேண்டியது அவசியமாகும்.

6.2). எனவே அசல் வழக்கில் தீர்வு காண மனுவில் சொல்லியுள்ள விபரங்களின் உண்மை தன்மையை கண்டறிய வேண்டியது அவசியமாகும்.

மனுதாரருக்கு வழக்கு சொத்தில் உரிமை இல்லாத நிலையில், மேற்படி உண்மை தன்மையை கண்டறிய மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் ஆவார். எதிர்மனுதாரர் தரப்பில் எழுப்பியுள்ள ஆட்சேபனை குறித்து அசல் வழக்கில் தீர்ப்பின் போது தீர்வு காணப்படும். எனவே நீதியின் நலன் கருதி மேற்படி மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** :-</u> இல்லை

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** :-</u>

| **ஆவண. எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 14.11.1926 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 11.12.1926 | பாகசாசன ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 06.04.1985 | செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 23.01.2007 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 20.11.2006 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.6 | 12.06.2008 | பாகபாத்திய விடுதலைப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | 12.06.2008 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | 12.06.2008 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | 20.05.1963 | உயில் ஆவணம் | சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

Draft/Fair order
IA.No.43/2026 in
OS.No. 853/2017 in
Dated:. 06.06.2026
DMC, Sulur.